# TNPSC GROUP I / II - PRELIMINARY

# INDIAN POLITY - WORKSHEET

## அடிப்படை கடமைகள்

**அடிப்படை கருத்துக்கள்**

- பகுதி IV A சரத்து 51A ல் அடிப்படை கடமைகள் இந்திய அரசியலமைப்பில் சேர்க்கப்பட்டது. இவை 1976ல் 42வது அரசியலமைப்பு சட்டத் திருத்ததால் சேர்க்கப்பட்டது.

- இந்திய அரசியலமைப்பில் இருக்கும் அடிப்படை கடமையானது முந்தைய சோவியத் யூனியன் அரசியலமைப்பில் இருந்து எடுக்கப்பட்டதாகும்.

- ஜப்பான் அரசியலமைப்பிலும் அடிப்படை கடமைகள் உள்ளன. நமது அரசியலமைப்பில் இணைக்கப்பட்டுள்ள அடிப்படை கடமையானது சரத்து 296①ல் உள்ள மனித உரிமை குறித்த கருத்தை ஒட்டி அமைந்துள்ளது.

- இதில் ஒவ்வொருவருக்கும் சமூகத்தில் கடமை உள்ளது. இவை மனிதனின் தனித்தன்மையை சுதந்திரமாகவும், முழுமையாகவும் மேம்படுத்துவதை உறுதி செய்கிறது.

**சர்தார் ஸ்வரன்சிங் குழுவின் பரிந்துரைகள் (Swaran Singh Committee Recommendations)**

- 1975ல் நிலவிய உள்நாட்டு கலவரத்தின் போது அடிப்படை கடமையின் தேவை மற்றும் அவசியத்தை அடிப்படையாக கொண்டு 1976ல் காங்கிரஸ் கட்சி சர்தார் ஸ்வரன்சிங் குழுவை அடிப்படைய உரிமைக்கு பரிந்துரை செய்தது.
- ஸ்வரன்சிங் குழு 8 அடிப்படை கடமைகளை மட்டுமே பரிந்துரை செய்தது.

◈ இக்குழுவின் பரிந்துரைப்படி 42வது அரசியலமைப்பு சட்டத்திருத்தத்தின்படி 2 கடமைகள் சேர்க்கப்பட்டு 10 அடிப்படை கடமைகளாக அரசியலமைப்பில் இணைக்கப்பட்டது.

| |
|---|
| 1976ல் 42வது அரசியலமைப்பு சட்டத்திருத்தத்தின் மூலம் பகுதி IV 'A' சரத்து 51A இந்திய குடிமகனுக்கான பத்து அடிப்படை கடமைகளை அரசியலமைப்பில் சேர்த்தது. |

## அடிப்படை கடமையின் பட்டியல் (List of Fundamental Duties)

◈ சரத்து 51A ன் படி இந்திய குடிமகனின் கடமைகள் பின்வருமாறு:

1. அரசியலமைப்புக்கு இணங்க மற்றும் அதன் கொள்கைகள் மற்றும் நிறுவனங்கள், தேசிய கொடி மற்றும் தேசிய கீதத்தை மதிக்க வேண்டும்.
2. சுதந்திரத்திற்கான தேசிய போராட்டத்தால் ஈர்க்கப்பட்ட அதன் உன்னத இலட்சியங்களை மதிக்க வேண்டும்.
3. இந்திய இறையாண்மை, ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டை நிலைநிறுத்தவும் பாதுகாக்கவும் வேண்டும்.
4. தேசிய சேவையாக நாட்டை காக்க அழைக்கப்பட்டால் செயல்பட முன்வர வேண்டும்.
5. இந்தியாவின் மத மேம்பாட்டுக்காகவும் அனைத்து மக்கள் மத்தியில் நல்லிணக்காகவும் அனைத்து மக்கள் மத்தியில் நல்லிணக்கம் மற்றும் பொதுவாக சகோதரத்துவத்தை ஊக்குவிக்கவும், பெண்களின் கண்ணியம் இழிந்த நடைமுறைகளை துறக்கவும் மற்றும் மொழியியல் மற்றும் பிராந்திய அல்லது பிரிவு வேறுபாடுகளை துறக்க வேண்டும்.
6. நாட்டின் கலப்பு, கலாச்சாரத்தையும் வளமான பாரம்பரியத்தையும் பாதுகாத்து மதிக்க வேண்டும்.
7. காடுகள்,ஏரிகள், ஆறுகள், வனவிலங்குகள் மற்றும் உயிரினங்கள் வாழத் தகுந்த இயற்கை சூழலை மேம்படுத்தவும் பாதுகாக்கவும் வேண்டும்.
8. விஞ்ஞான மனோபாவம், மானுடம் மற்றும் சீர்திருத்த எண்ணத்தை உருவாக்க வேண்டும்.
9. பொது சொத்தை பாதுகாக்கவும் மற்றும் வன்முறையை கட்டுபடுத்தவும் வேண்டும்.
10. தனிப்பட்ட மற்றும் கூட்டு நடவடிக்கையின் எல்லாத் துறைகளிலும் சிறநத்து சாதனையை அதிகளவில் உயர்த்துவதற்கு தேசிய அளவில் தொடர்ந்து முயற்சி இருக்க வேண்டும்.
11. 6லிருந்து 14 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு கல்வி வாய்ப்பை வழங்க வேண்டும். இந்த கடமை 2005ம் ஆண்டு, 86வது அரசியலமைப்பு சட்டத்திருத்தத்தால் சேர்க்கப்பட்டது.

**அடிப்படை கடமைகளின் சிறப்பம்சங்கள்:**

1. சில நீதி, நியாயம் சம்மந்தமான கடமைகள். வேறு சில குடிமையியல் சம்மந்தமான கடமைகள்.
2. அடிப்படை கடமைகள் குடியுரிமை பெற்றவர்களுக்கு மட்டுமே அன்றி அந்நியர்களுக்கு கிடையாது.
3. அரசு நெறிமுறைக் கோட்பாட்டைப் போன்று அடிப்படை கடமைகளை சரியாக செயல்படுத்த எந்த நபரும் நீதிமன்றத்தை அணுக இயலாது. இருப்பினும் நாடாளுமன்றம் சரியான சட்டங்கள் மூலம் அதை நடைமுறைப்படுத்தலாம்.

**வர்மா குழுவின் ஆய்வுகள் (Verma Committee Observations)**

- 1990ல் குடிமக்களின் அடிப்படை கடமையின் மீது வர்மா மீது குழு அமைக்கப்பட்டு அடிப்படை கடமைகளை செயல்படுத்த சில சட்ட விதிகள் இருப்பதை அடையாளம் கண்டது. அவை
  1. 1971ல் அவமரியாதை தடுப்பின் பேரில் தேசிய மரியாதை சட்டம் (Prevention of Insults to National Honour Act) கொண்டு வரப்பட்டு தேசிய கொடி மற்றும் தேசிய கீதத்திற்கு இழைக்கப்பட்ட அவமரியாதை தடுக்கப்பட்டது.
  2. பலமொழி, இனம், பிறந்த, இடம், மதம் மற்றும் வெவ்வேறு பிரிவு மக்களுக்கிடையே பகையை ஊக்குவித்தலை தடுக்க பல்வேறு குற்றவியல் சட்டங்கள் தண்டனையை வழங்குகின்றன.
  3. 1955ல் மனித உரிமைகள் பாதுகாப்பு சட்டத்தின் (Protection of Civil Rights Act) கீழ், சாதி மற்றும் மதம் தொடர்பான குற்றங்களுக்கு தண்டனை வழங்குகிறது.
  4. இந்திய தண்டனை சட்டத்தில் (Indian Penal Code-IPC) அவதூறுகள் மற்றும் தேசிய ஒருங்கிணைப்புக்கு எதிராக இருக்கும் சில கூற்றுகளுக்கு தண்டணை வழங்கி இவற்றை தடுக்கிறது.
  5. 1967ல் சட்டமற்ற நடவடிக்கைகள் (தடுப்பு) (Unlawful Activities (Prevention) Act) தடுப்பு சட்டத்தின் கீழ் வகுப்புவாத அமைப்புகளை சட்டவிரோத சங்கம் என்று அறிவித்தது வகுப்புவாதத்தை குறைக்கிறது.

6. 1951 மக்கள் பிரதிநித்துவச் சட்டத்தின் (Representation of People Act) கீழ் ஊழல் நடைமுறையில் ஈடுபட்டதற்காக பாராளுமன்றம் மற்றும் மாநில சட்டமன்ற உறுப்பினர்களை நிராகரிக்க செய்கிறது. மத அடிப்படையில் வாக்குகளை வற்புறுத்தி வெவ்வேறு பிரிவு மக்களுக்கு இடையே விரோதத்தை தூண்டுவதை இச்சட்டத்தின் மூலம் கட்டுப்படுத்துகிறது.

7. 1972ல் கொண்டு வரப்பட்டு காட்டுயிர் (பாதுகாப்பு) சட்டத்தின் (Wildlife (Protection) Act) கீழ் அரிதான மற்றும் குறைந்து வரும் இனங்களின் வர்த்தகத்தை தடை செய்கிறது.

8. 1980ல் கொண்டு வரப்பட்ட வன (பாதுகாப்பு) சட்டத்தின் (Forest (Conservation) Act) கீழ் வன நிலங்கள், காடுகளை கண் மூடித்தனமாக, அழித்தல் தடுக்கப்பட்டது.